செய்தி வெளியீடு எண் :34 நாள் :28.03.2018

# தேனி மாவட்டம்

## தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், கோடைகால நீச்சல் பயிற்சி முகாம் நடைபெறவுள்ளது மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தகவல் :-

*******

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், தேனி மாவட்டத்தின் சார்பாக கோடைகால நீச்சல் பயிற்சி முகாம் 01.04.2018 முதல் 30.06.2018 வரையிலான காலங்களில் நடைபெறவுள்ளது. நீச்சல் கற்றுக்கொடுக்கும் திட்டத்தின்கீழ் நடைபெறும் 12 நாட்கள் பயிற்சி முகாம் 6 கட்டங்களாக நடைபெறவுள்ளது.

ஆறு வயது தாண்டிய அனைவரும் இப்பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம். இத்திட்டத்திற்கான 12 நாட்களுக்கு கட்டணம் ரூ. 1,200/- ஆகும். இத்தொகையினை வங்கி வரைவோலையாக மட்டுமே செலுத்த முடியும். நீச்சல் கற்றுக்கொள்ளும் திட்டத்தின்கீழ் வரும் சிறுவர்கள் குறைந்தபட்ச உயரம் 4 அடி (120 செ.மீ) இருத்தல் வேண்டும்.

<u>நீச்சல் கற்றுக்கொள்ளும் பயிற்சி முகாம் நடைபெறும் நாட்களின் விபரங்கள்.</u>

1. 01.04.2018 முதல் 15.04.2018 வரை - 02.04.2018 & 09.04.2018 திங்கட்கிழமை விடுமுறை மற்றும் 14.04.2018 தமிழ் புத்தாண்டு விடுமுறை
2. 17.04.2018 முதல் 29.04.2018 வரை - 23.04.2018 திங்கட்கிழமை விடுமுறை
3. 02.05.2018 முதல் 15.05.2018 வரை - 07.05.2018 & 14.05.2018 திங்கட்கிழமை விடுமுறை
4. 17.05.2018 முதல் 30.05.2018 வரை - 21.05.2018 & 28.05.2018 திங்கட்கிழமை விடுமுறை
5. 01.06.2018 முதல் 14.06.2018 வரை - 04.06.2018 & 11.06.2018 திங்கட்கிழமை விடுமுறை
6. 17.06.2018 முதல் 30.06.2018 வரை - 18.06.2018 & 25.06.2018 திங்கட்கிழமை விடுமுறை

<u>தினசரி நீச்சல் கற்றுக்கொடுக்கும் பயிற்சி நேரம்</u>

| காலை வேளை | மாலை வேளை |
|---|---|
| 1. 07.30 A.M. to 08.30 A.M. | 1. 03.00 P.M. to 04.00 A.M. |
| 2. 08.30 A.M. to 09.30 A.M. | 2. 04.00 P.M. to 05.00 A.M. |

மேற்கண்ட நீச்சல் கற்றுக்கொள்ளும் பயிற்சி முகாமில் கலந்து கொள்பவர்கள் 12 நாட்களுக்கு ஒரு வேளை (1 மணி நேரம்) பயிற்சிக்கான தொகை ரூ.1,200/- யை in favour of “The Member Secretary, Sports Development Authority of Tamil Nadu” payable at Chennai என்ற முகவரியில் வங்கி வரைவோலை வாங்கி வந்தால் மட்டுமே கலந்து கொள்ள இயலும்.

மேற்கண்ட விபரங்கள் தொடர்பாக தொடர்பு கொள்ள வேண்டிய தொலை பேசி எண்கள்
மாவட்ட விளையாட்டு அரங்கம் - 04546 253090
மாவட்ட விளையாட்டு அலுவலர் - 7401703505
நீச்சல் பயிற்றுநர் - 9994944166

<u>அலுவலக முகவரி -</u>

மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர்,
மாவட்ட விளையாட்டு அரங்கம்,
மாவட்ட ஆட்சித் தலைவர் பெருந்திட்ட வளாகம்,
தேனி.

எனவே, மாவட்டத்திலுள்ள ஆறுவயது தாண்டியவர்கள் நீச்சல் கற்றுக்கொடுக்கும் திட்டத்தின்கீழ் கோடை கால நீச்சல் பயிற்சி முகாமில் கலந்து கொண்டு பயனடையுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தேனி.**